செ. கு. எண்:052 நாள் :01.03.2014

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை - 1.3.2014

31.1.2014 அன்று கோயம்புத்தூர் மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம் வனச்சரகம், துடியலூர் பிரிவு அருகில் தெலுங்குபாளையம் கிராமம், வேலாண்டிபாளையம் வெங்கிட்டாபுரத்தைச் சேர்ந்த திரு. கருணாகரன்;

4.2.2014 அன்று நீலகிரி மாவட்டம், கோத்தகிரி வட்டம், நெடுகுளா உள்வட்டம், அல்லிமாயா கிராமம் அருகே தெங்குமரஹடா பகுதியைச் சேர்ந்த திரு. அசோகன்;

8.2.2014 அன்று ஈரோடு மாவட்டம், ஆசனூர் வனச்சரகம், குத்தியாலத்தூர் காப்புக் காடு பகுதி அருகே குத்தியாலத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. சென்னியப்பன் என்பவரின் மகன் நாச்சிமுத்து;

15.2.2014 அன்று கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் வட்டம், அட்டகுறுக்கி கிராமம், ஒட்டரப்பாளையம் ஏரி அருகே, பண்ணப்பள்ளி கிராமத்தைச் சேர்ந்த திரு. சின்னவீரப்பா என்பவரின் மகன் வெங்கடேஷ்;

–– ஆகியோர் காட்டு யானைகள் தாக்கியதில் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

10.2.2014 அன்று திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் வட்டம், கூக்கால் கிராமம், குண்டுபட்டி உடையார் காடு அருகே கூக்கால் கிராமம் உட்கடை, குண்டுபட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. ரங்கராஜ் என்பவரின் மகன் சுரேஷ் காட்டுப் பன்றி தாக்கியதில் உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காட்டு யானைகள் தாக்கியதில் அகால மரணமடைந்த கருணாகரன் அசோகன், நாச்சிமுத்து, வெங்கடேஷ் மற்றும் காட்டுப் பன்றி தாக்கியதில் அகால மரணமடைந்த சுரேஷ் ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு வனத் துறை மூலம் தலா மூன்று லட்சம் ரூபாய் உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9